VOL. 13 | SPECIAL ISSUE 1 | JANUARY 2026
P-ISSN: 2321-788X | E-ISSN: 2582-0397

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer - Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

SHANLAX #SINCE1990

ஷினாவத்ரா பல்கலைக்கழகம், தாய்லாந்து

ஹோலி கிறாஸ் ஹோம் சயின்ஸ் கல்லூரி
தூத்துக்குடி

ஹோலி கிறாஸ் கல்லூரி
தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு), நாகர்கோவில்

SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS SCIENCE AND HUMANITIES
மதுரை

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

## பன்முக நோக்கில் தமிழ் இலக்கியங்கள்

ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர் ஞா. அந்தோணி சுரேஷ்
முனைவர் சி. ஆன்சிமோள்
முனைவர் மி. ஜோஸ்மின் ரேணுகா

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX JOURNALS
editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

# கண்மணி குணசேகரன் புதினங்களில் பண்பாட்டு மானிடவியல் சிந்தனைகள்

*ப. மேரி ஸ்டெல்லா*
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை

*முனைவர் ச. பிரியா*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை

மலர்: 13

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.18205425

## முன்னுரை

மானுடவியல் என்பது மனிதனைப் பற்றி அறியக்கூடிய அறிவியல் துறையாகும். கல்விசார் நிலையில் இத்துறை தோன்றி ஏறக்குறைய *119* ஆண்டுகள் தாம் ஆகின்றன. அதாவது சர் எட்வர்ட் பானட் டைலர் கி.பி.*1884* -ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் மானிடவியல் துறைக்குப் பொறுப்பேற்ற ஆண்டுதான் இத்துறை முறைப்படியான தோற்றத்தைப் பெற்றது. இப்பல்கலைக்கழகத்தில் டைலர் பெற்ற நியமனமே கல்விசார் நிலையில் மானிடவியலார் பெற்ற முதல் பதவியாகும். இதன் பின்னரே மானிடவியல் துறை உலகெங்கும் வேரூன்றத் தொடங்கியது. இருப்பினும் மானிடவியல் துறையானது பல்வேறு துறைச் சார்ந்த அறிஞர்களின் அறிவு வேட்கையாலும் உழைப்பினாலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோற்றம் பெற்று விட்டது.

இத்துறையின் தோற்றம் மற்றும் வளர்ச்சி நிலைகள் குறித்து காணும் பொழுது பல்வேறு காலக் கட்டத்தில் வாழ்ந்த மக்களின் மரபுகள், வாழ்க்கை முறைகள், நம்பிக்கைகள், பண்பாட்டு நிலைகள், உயிரியல் நிலைகளென பரந்து பட்ட நிலையில் நின்று ஆராய்வது சரியாக இருக்கும். இக்கால மானிடவியல் கடலென விரிந்த துறையாதலால் அதை உடல் சார்ந்த மானிடவியல் (Physical Anthropology), பண்பாட்டு மானிடவியல் (Cultural Anthropology) என்னும் பிரிவுகளில் நின்று அறிவது பொருத்தமாக இருக்கும். மானுடவியலின் மையக் கருத்தாக விளங்கும் பண்பாட்டை அறிவியல் பூர்வமாக விளக்குவதற்கு முதலில் மானுடவியலின் குறித்து அறிவது அவசியமாகிறது.

பண்பாட்டு மானுடவியல் என்பது ஒரு சமூகத்தின் வாழ்க்கை நெறி, நம்பிக்கைகள், சடங்குகள், அதிகார அமைப்புகள், நினைவுகள், இடப்பற்றும் அடையாளங்களும் எப்படி உருவாகின்றன என்பதை ஆராயும் துறையாகும். அதனடிப்படையில் கண்மணி குணசேகரனின் புதினங்கள் வலுவான பண்பாட்டு மானிடவியல் சிந்தனைகளை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த ஆய்வுக்களமாகவும் ஆவணமாகவும் திகழ்கின்றன.

### எழுத்தாளர் கண்மணி குணசேகரன்

தமிழிலக்கியத்தில் தனித்துவமான மிக முக்கியமான எழுத்தாளராகத் திகழ்பவர். இவர் தமிழகத்தின் கடலூர் மற்றும் விழுப்புரம் பகுதியைச் சேர்ந்த அடித்தள மக்களின் வாழ்வியல் போராட்டங்களைத் தம் படைப்பிலக்கியங்களில் உள்ளது உள்ளபடியே நுட்பமாக பதிவுச் செய்துள்ளார். இப்படைப்புகளில் சாதி வர்க்கம், இடம் பெயர்வு, ஓரங்கட்டப்பட்ட அடித்தள மக்களின் வாழ்க்கை நிலை, மொழி, பண்பாட்டு உறவுகள் ஆகியன ஆழமாக வெளிப்படுகின்றன. இவரது புதினங்களான 'வந்தாரங்குடி', 'நெடுஞ்சாலை', 'அஞ்சலை' 'கோரை' ஆகிய புதினங்கள் வட்டார வாழ்க்கையின் உண்மைத் தன்மையையும், மொழி, சடங்குகள், உறவு முறைகள், பொருளாதார அமைப்புகள் ஆகியவற்றை மையமாக வைத்தும் படைக்கப்பட்டுள்ளன. இப்புதினங்களில் காணலாகும் பண்பாட்டு மானுடவியல் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரையின் களம் அமைகின்றது.

### மானிடமும் பண்பாடும்

மானிடப் பண்புகளின் அகவளர்ச்சி நிலையினையே பண்பாடு என்கிறோம். மனிதனுடைய அறிவும் அனுபவமும் உயர்ந்த பண்புகள் அடிப்படையில் மட்டுமல்லாது அவை பருப்பொருள்களாகவும் வெளிப்படுகின்றன. உணவு, உடை, உறையுள், சிற்பம், ஓவியம் போன்ற பிற பொருள்கள் வாயிலாகவும் மனிதனின் வளர்ச்சிநிலை வெளிப்படுகின்றது. மக்கள் தங்களால் இயற்றிக் கொள்ளப்பட்ட சமூகப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சமயங்கள், கருவிகள் முதலியவற்றைப் பண்பாடு என்ற சொல்லால் குறிக்கின்றனர். மக்களின் அறிவுநலம், ஒழுக்க உயர்வு, கொள்கை நலம், பண்பு நலம், வாழ்க்கை நலம் ஆகியவை மென்மேலும் திருந்திய நிலையே பண்பாடு எனலாம். பண்பாடு என்னும் சொல் "பண்படு" என்னும் சொல்லிலிருந்து அமைத்துக் கொள்ளப்பட்டது1 என்பர். (1. தமிழர் நாகரிகமும் பண்பாடும், அ. தட்சிணாமூர்த்தி, ப. 3).

### புதினத்தில் பண்பாடு

நிலத்திற்கும் உள்ளத்திற்கும் இடையேயான நெருங்கிய தொடர்பினை அறிந்த தமிழர்கள் இவ்விரண்டையும் "புலன்" என்ற சொல்லால் குறித்தனர். காலப்போக்கில் "நிலபுலன்" என இணைந்து வழங்குவதாயிற்று. இக்கட்டுரையின் களமாக அமைகின்ற எழுத்தாளர் கண்மணி குணசேகரன் அவர்களின் புதினங்களில், கையாளப்பெறும் பாத்திரப் படைப்புகளனைத்தும் மண் சார்ந்த பழக்கவழக்கங்கள், சாதிய முறைகள், அச்சாதிய முறைக்கேயுரிய கட்டுப்பாடுகள், அச்சமூகம் சார்ந்த பெண்களின் அவல நிலைகள், வறுமை நிலை , கல்வியின்மை, குடும்பச் சூழல், சமூக மதிப்பீடு என அனைத்தையும் பதிவுச் செய்யும் மிகச் சிறந்த ஆவணமாகவும், வட்டார வழக்குச் சார்ந்த பண்பாட்டுப் பதிவாகவும், பண்பாட்டு கலைக் களஞ்சியமாகவும் திகழ்கின்றன.

### மானிடமும் பண்பாடும்

மானுடவியலில் முக்கியமாக நான்கு வகைகள் உள்ளன. அவை, 1. பண்பாட்டு மானுடவியல், 2. உயிரியல் மானுடவியல், 3. தொல்லியல் மானுடவியல், 4. சமூக மானுடவியல் என்பனவாகும். இப்பண்பாட்டு மானிட வகைகளனைத்தும் மனிதர்களின் சமூக, கலாச்சார, உயிரியல் மற்றும் கடந்த காலக் கூறுகளை ஆய்வுச் செய்கின்றன.

புதினத்தில் அரசு வளர்ச்சித் திட்டங்களால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. வாழ்வாதாரம் பாதிக்கப்படும் மக்களின் வாழ்வியல் வெகு சிறப்பாக பதிவுச் செய்யப்பட்டுள்ளது.

**சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள்**

இவரது புதினமான அஞ்சலையில் ஒடுக்கப்பட்ட பெண்ணின் குரல் புலப்படுகிறது. சடங்குகளாலும், சம்பிரதாயங்களாலும் சிதைந்துப் போன பெண்ணாக, ஒரு அபலைப் பெண்ணாக அஞ்சலை சித்தரிக்கப்படுகிறாள். அவளது மூட நம்பிக்கைகளால் சமுதாயத்தின் நிலையில் அவள் படும் பாடும், அவளது துயரமும் சொல்லி மாளாதவை. அவளது வாழ்க்கை, கனன்றும் புகையும் வாழ்க்கை 4. (அஞ்சலை-புதினம், கண்மணி குணசேகரன், பக். 69-70) என்று அஞ்சலையின் நிலையினை விளக்குகிறார்.

**விளிம்புநிலை மக்களின் வாழ்வாதாரம்**

தமிழ்ச் சமூகத்தின் விளிம்பு நிலை மக்களின் வாழ்வையும் கிராமிய பண்பாட்டையும் எடுத்துக்காட்டும் ஆசிரியர், அம்மக்களின் உழைப்பு மற்றும் உறவுநிலைகளை மானுடவியல் கண்ணோட்டத்தில் சித்தரிக்கிறார். அஞ்சலையின் வாழ்வில் பிரதிபலிக்கும் பண்பாட்டுக் கூறுகளையும் ஆராய்கின்றார். தமிழ் கிராமிய பண்பாட்டின் உள்ளார்ந்த சிக்கல்களையும் அதில் பெண்ணின் நிலையினையும் மானுடவியல் நோக்கில் அஞ்சலைப் புதினத்தில் பதிவுச் செய்கின்றார். அஞ்சலையின் வாழ்வில் காணும் உழைப்பு, வன்முறை, நம்பிக்கைகள், ஏக்கங்கள் ஆகியவை அச்சமூகத்தின் ஆழமான படிநிலைகளையும், மாற்றத்திற்கான வேட்கையையும் எடுத்துரைக்கின்றன.

**விளிம்புநிலை மக்களின் குரல்**

விளிம்பு நிலை மக்களின் குரல்களைக் கேட்கச் செய்யும் இப்புதினம் பண்பாட்டு மானுடவியல் ஆய்விற்கு முக்கியமான சாளரமாகத் திகழ்கிறது. ஒரு பண்பாட்டை மற்றொன்றோடு ஒப்பிடாமல் அதன் சூழலில் புரிந்து கொள்ளுதல். கண்முன் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு வாழ்க்கையைக் கண்ட அனுபவத்தை அளிப்பதே இயல்பு வாதத்தின் கலை. பரிசீலனை அல்ல. வரலாற்றில் வைத்துப் பார்த்தல் அல்ல, உண்மையான வாழ்க்கை எப்போதுமே முடிவுகளும் பதில்களும் அற்றது. அறியுந்தோறும் விரிவது5. (கோரை - புதினம், கண்மணி குணசேகரன், ப. 64) சமூகத்தில் நிலவும் வன்முறையான மனநிலையும், ஆணாதிக்கப் போக்கும், அடிமைத்தனமும், கல்வியில்லா நிலையும், வறுமையும் அகல பண்பாட்டு மானுடவியலை ஆராயவும் விளிம்புநிலை மக்களின் குரல்களாக புதினங்களில் எதிரொலிப்பதை அறிய முடிகின்றது.

**வரலாறு**

மக்கள் அனுபவத்தில் வடிவமைக்கப்பட்ட பண்பாடு. கண்மணி குணசேகரன் வரலாற்றை வெறும் நிகழ்வுகளாகப் பார்க்கவில்லை. வரலாறு மக்களின் உணர்வுகளிலும், காயங்களிலும், உயிரோடு இருக்கும் பண்பாடு என்பதைக் காட்டுகிறார். காலனித்துவம், குடியேற்றம், அரசியல் மாற்றங்கள் போன்றவை தனிநபர் வாழ்க்கையிலும், பண்பாட்டு அடையாளத்திலும் எவ்வாறு பதிகின்றன?6 (வந்தாரங்குடி புதினம், கண்மணி குணசேகரன், ப. 403) என்பதைக் காட்டுகிறார். இதன் மூலம் வரலாறு- பண்பாடு- நினைவு ஆகியவை ஒன்றுக்கொன்று நெருங்கிப்பின்னிப் பிணைந்துள்ளது என்பதை இயல்புவாத நிலையில் விளக்கியுள்ளார்.

**ஒடுக்கப்பட்ட மக்களின் பண்பாட்டு எதிர்ப்பு**

அவரதுபுதினங்களில்ஒடுக்கப்பட்டமக்களின் தினசரி வாழ்வும், அவர்களின் பண்பாட்டு எதிர்ப்பும் மையமாகின்றன. மனித கண்ணியத்தைக் காக்கும் முயற்சிகள், சொல் வழக்குகள் மற்றும் கதைப்பாடல்கள், பெண்களின் எதிர்ப்பு மொழி ஆகியவை அனைத்தும் ஒரு பண்பாட்டு அரசியல்7 (நெடுஞ்சாலை புதினம், கண்மணி குணசேகரன், ப. 216) என ஆசிரியர் சித்தரிக்கின்றார். இதனால் பண்பாட்டு

மானுடவியல் சமூக மாற்றத்திற்கான ஆதாரமாகவும், மிகச்சிறந்த ஆயுதமாகவும் திகழ்வதை அவரது படைப்பின் வழி அறிய முடிகின்றது.

## முடிவுரை

இப்பண்பாட்டு மானுடவியலின் பயன்களாக மனித பன்முகத்தன்மையைப் புரிந்து கொள்வதும், சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தலும், கொள்கைகளை உருவாக்குவதற்கான கட்டமைப்பை வழங்குதலும், கலாச்சார பன்முகத்தன்மையைப் புரிந்து கொள்வதும் என அறியப்படுகின்றது. மனித உறவுகளிலுள்ள பரந்த வேறுபாடுகளைப் புரிந்து கொள்வதற்கும், பாராட்டுகளைத் தெரிவிப்பதற்கும், சகிப்புத்தன்மையை மேம்படுத்துவதற்கும், இனவாதத்தைக் குறைப்பதற்கும், சமூக நல்லிணக்கத் தொடர்பை ஊக்குவித்தலுக்கும், தகவல் தொடர்பை மேம்படுத்துவதற்கும் உதவுகின்றது. இவை கலாச்சாரப் பிளவுகளைக் குறைக்கவும் பல்வேறு குழுக்களிடையே தகவல் தொடர்புகளை மேம்படுத்தவும் கருவிகளாகவும் திகழ்கின்றன.

பெரும்பாலான மனிதவியல் கோட்பாடுகள் இடஞ் சார்ந்த மற்றும் உலகம் தழுவிய நிலைப்பாடுகளுக்கு இடையேயான இழுநிலை பற்றிய மதிப்பீடு பற்றியும் மற்றும் ஆர்வம் காரணமாக தூண்டப்பட்டவையே. கண்மணி குணசேகரன் அவர்களின் புதினங்கள் பண்பாட்டு மானுடவியல் ஆய்வுக்கு முக்கியமான சான்றுகளாகத் திகழ்கின்றன. சாதி, மொழி, பாலினம், வரலாறு, இடம்பெயர்வு, எதிர்ப்பு ஆகிய பண்பாட்டுக் கூறுகளின் வழியாக மனிதர்கள் தங்கள் வாழ்வை எவ்வாறு அர்த்தமுள்ளதாக வடிவமைக்கிறார்கள் என்பதை அவர் துல்லியமாகப் பதிவு செய்துள்ளார். இதனால் அவரது புதினங்கள் இலக்கிய படைப்புகளாக மட்டுமல்ல, ஒரு சமூகத்தின் செயல்பாடுகளை உள்ளது உள்ளபடியே அறியச் செய்யும் மிகத் துல்லியமான பண்பாட்டு ஆவணமாகத் திகழ்கின்றது என்பது இக்கட்டுரையின் முடிவாக உணர்த்தப் பட்டுள்ளது. வணக்கம். நன்றி!

## துணைமை ஆதாரங்கள்


1. தமிழர் நாகரிகமும் பண்பாடும், முனைவர் அ. தட்சிணாமூர்த்தி, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை. திருந்திய மறுபதிப்பு, ஜீன்.2019.
2. அஞ்சலை (புதினம்), கண்மணி குணசேகரன், தமிழினி பதிப்பகம், சென்னை, நான்காவது பதிப்பு, 2022.
3. வந்தாரங்குடி (புதினம்), கண்மணி குணசேகரன், தமிழினி பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, டிசம்.2013.
4. நெடுஞ்சாலை (புதினம்), கண்மணி குணசேகரன், தமிழினி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, ஜனவரி, 2021.
5. கோரை (புதினம்), கண்மணி குணசேகரன், தமிழினி பதிப்பகம், சென்னை. இரண்டாவது பதிப்பு, 2019.

SHANLAX
INTERNATIONAL JOURNAL OF
ARTS, SCIENCE AND HUMANITIES
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

Vol. 13 Special Issue 1 January 2026

P-ISSN: 2321-788X E-ISSN: 2582-0397

ஷினாவத்ரா பல்கலைக்கழகம்

தாய்லாந்து

ஹோலி கிராஸ் ஹோம் சயின்ஸ் கல்லூரி

தூத்துக்குடி

ஹோலி கிராஸ் கல்லூரி

தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு), நாகர்கோவில்

மற்றும்

Shanlax International Journal of Arts, Science and Humanities

மதுரை

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# பன்முக நோக்கில் தமிழ் இலக்கியங்கள்

# பொருளடக்கம்


| வ.எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | கண்மணி குணசேகரன் புதினங்களில் பண்பாட்டு மானிடவியல் சிந்தனைகள்<br>**ப. மேரி ஸ்டெல்லா & முனைவர் ச. பிரியா** | 01 |
| 2 | திருக்குற்றாலக் குறவஞ்சி காட்டும் பண்பாட்டு மரபுகள்<br>**முனைவர் செ. அன்பு** | 07 |
| 3 | தொல்காப்பிய பொருளதிகார அகவொழுக்கச் செய்திகளில் வாழ்வியல் கூறுகள்<br>**முனைவர் தி. பிரகாசி மேரி** | 12 |
| 4 | தமிழிலக்கியங்களில் வரலாற்றுக் கூறுகள்<br>**முனைவர் ஆ. மேரி இமாகுலேட்** | 15 |
| 5 | பெருமழைப்புலவர் உரையின்வழி அறியலாகும் மகளிர் குறித்த வழக்காறுகள்<br>**முனைவர் ஆ. இந்திரா** | 21 |
| 6 | மணிமேகலையில் மனித நேயம்<br>**முனைவர் ஆ. தேவதா** | 25 |
| 7 | முல்லைப் பாட்டில் பாசறை அமைப்பு<br>**முனைவர் தா. லதா** | 31 |
| 8 | மணிமேகலையும் - அட்சய பாத்திரமும்<br>**முனைவர் ஆ. கவிதாராணி** | 35 |
| 9 | புறநானூற்றுப் பெண் புலவர்களின் பாடல்கள் வழி மறக்குடி மகளிரின் இயல்புகள்<br>**முனைவர் வை. நம்பித்தாய்** | 40 |
| 10 | பதினெண் கீழ்க்கணக்கு அக நூல்களில் பிற அகமரபுகள்<br>**முனைவர் தி. சாந்தி** | 45 |
| 11 | எட்டுத்தொகை நூல்களில் அறம்<br>**முனைவர் என்.ஆர். ஷிபஜா** | 49 |

### பண்பாட்டு மானிடவியல்

பண்பாட்டு மானிடவியல் என்பது பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட நான்கு மானிடவியல் துறைகளில் ஒன்றாகும். மானுடவியலாளர்களோ பண்பாடு என்பது "மனித இயற்கை" என வாதிடுகின்றனர். அத்துடன் எல்லா மக்களும் தங்களுடைய கருத்துக்களை அனுபவங்களை வகைப்படுத்தவும், வகைப்பாடுகளைக்குறியீட்டு அடிப்படையில் ஆக்கிக் கொள்ளவும், அத்தகைய குறியீட்டு வடிவங்களை மற்றவர்களுக்கு கற்பிக்கவும் தகுதி உள்ளவர்களாக இருக்கின்றார்கள். பண்பாடு என்பது கற்றுக் கொள்ளப்படுவதால் வெவ்வேறு இடங்களில் வாழ்பவர்கள் வெவ்வேறு பண்பாடுகளை உடையவர்களாக இருக்கிறார்கள். மக்கள் தாங்கள் வாழும் இடங்களுக்கு ஏற்புடையவர்களாகத் தங்களை ஆக்கிக் கொள்கிறார்கள். அதனால் வெவ்வேறு சூழல்களில் வாழ்கின்ற மக்கள் மாறுபட்ட பண்பாடுகளை உடையவர்களாக உள்ளார்கள் என்றும் மனிதவியலாளர்கள் எடுத்துரைக்கிறார்கள். பெரும்பாலான மனிதவியல் கோட்பாடுகள் இடம் சார்ந்த மற்றும் உலகம் தழுவிய நிலைப்பாடுகளுக்கு இடையேயான இழுநிலைப் பற்றிய மதிப்பீடு மற்றும் ஆர்வம் காரணமாக தூண்டப்பட்டவையே யாகும்.

### மானிடப் பண்பு

எழுத்தாளர் கண்மணி குணசேகரனின் படைப்புகளை மானுடவியல் நோக்கில் ஒப்பிட்டு ஆராயும் பொழுது சமூகம் சார்ந்த மானிடப் பண்பாடு மற்றும் மனித நல்லிணக்கணம் ஆகியன ஒன்றையொன்று எவ்வாறு சார்ந்துள்ளன? அவை ஒன்றையொன்று எவ்வாறு பாதிக்கின்றன என்பதை நுட்பமாக அறிய முடிகிறது. மானிடப் பண்பு என்ப, சமுதாய விலங்காகிய மனிதன் பிற மனிதர்களோடு கலந்து வாழும் பொழுது தன்னலத்தை ஓரளவு புறக்கணித்துப் பொது நலத்தைப் பேண வேண்டியவனாகிறான். இதற்குச் சில பண்புகள் தேவைப்படுகின்றன. அன்பு, அருள், வாய்மை, தூய்மை, ஒப்புரவு, கண்ணோட்டம், ஈகை, நாணம் முதலிய பண்புகள் அனைத்தும் மனிதன் பிறரோடு கொள்ளும் உறவினுக்கு அடிப்படை யானவைகளே யாகும். இவ்வுறவு தன்னுடைய சிறு சமூக எல்லைக்கோட்டைக் கடந்து செல்லுகிறது. அது உலக உறவாக வளர்கிறது. அதுவே மனித குலத்தின் சிறப்புப் பண்பாகும் 2. (2. தமிழர் நாகரிகமும் பண்பாடும், அ.தட்சி ணாமூர்த்தி, ப.01). மேற்குறித்தபண்புகள்யாவும் மனித இனம் முழுவதற்கும் உரியனவாகும். இப்பண்பு மனித இனத்தோடு மட்டும் கட்டுண்டு நில்லாது, உயிரினங்கள் அனைத்தையும் தழுவி நிற்கும். இதுவே மிக உயர்ந்த மானிடப் பண்பு என்பதை அறிய முடிகின்றது.

### சாதி மற்றும் சமூக அமைப்பின் பண்பாட்டு வடிவங்கள்

கண்மணி குணசேகரனின் புதினங்களில் மேற்குறிப்பிட்ட மானிடவியல் பிரிவுகளோடு, சாதிப்பிரிவினைகள் வெறும் சமூகப் பிரிவாக மட்டுமல்லாமல் அவை ஒரு பண்பாட்டு குறியீடாக அனுபவமாகச் செயல்படுவதையும் அறிய முடிகின்றது. மேலும், பிறப்பு அடிப்படையில் உரிமை ஏற்படுத்தும் நிலைப்பாடுகள் குறித்து இருவேறு நிலைகளில் நுணுக்கமாகப் பதிவுச் செய்கின்றார். *1. சடங்குகள் மற்றும் தடைகள்; 2.*ஆணாதிக்கத்துடன் இணைந்த செயல்பாடுகள் என்னும் இருநிலைகளில், சாதி என்பது தனி நபரின் வாழ்க்கையை மட்டுமல்ல, அவர்களின் உணவு, உடை, தொழில், விருப்பு, வெறுப்பு, உறவு போன்ற அனைத்தையும் கட்டுப்படுத்தும் பண்பாட்டு கட்டமைப்பு என்பதைக் கண்டு கேட்டு உணர்ந்து எடுத்துக்காட்டுகின்றார்.

சமூக நிலையில் பண்பாட்டு மானுடவியல் எங்களுடைய இனம் இந்த உலகத்தை குறியீட்டு முறையில் விளங்கிக் கொள்வதற்கும்,சமுதாய ரீதியில் குறியீட்டு முறையில் பயிலவும், பயிற்றுவிக்கவும் குறியீடுகளின் அடிப்படையில் உலகத்தையும் எங்களையும் மாற்றிக் கொள்வதற்கும் ஏதுவாக முழுமையான தகுதியை வளர்த்துக் கொண்டுள்ளது *3. (3.* அஞ்சலை -புதினம்,

கண்மணி குணசேகரன், பக். 69-70) என்னும் கருத்தினை, மானுடவியலின் அடிப்படையாக கண்மணி குணசேகரன் நடுநாட்டுக் கொல்லை என்னும் பகுதியில் விளக்குகிறார்.

**புதினங்களில் பண்பாட்டு மானுடவியல் கூறுகள்**

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட புதினங்களில் ஒரு சில பண்பாட்டு மானிடவியல் கூறுகளை எடுத்துக்காட்டலாம். அவை,

**மொழி மற்றும் பேச்சு வழக்கு**

கண்மணி குணசேகரனின் கதாப்பாத்திரங்கள் தங்கள் சொந்த வட்டார மொழியில் பேசுகின்றன. "அஞ்சலை" புதினம் வட்டார மக்களின் பேச்சு வழக்குகளையும், சமூகநம்பிக்கைகளையும், சமய நம்பிக்கைகளையும் வாழ்க்கை முறைகளையும் உள்ளதை உள்ளபடியே எடுத்தாள்வது பண்பாட்டு மானிடவியல் ஆய்வுக்கு முக்கியமானத் தரவாக அமைகின்றது.

**சாதியம் மற்றும் சமூக அமைப்பு**

கண்மணி குணசேகரனின் புதினங்களில் சாதியம், சமூக அமைப்பு, வர்க்க பிரச்சனைகள் மையமாக எடுத்தாளப்பட்டுள்ளன. "அஞ்சலை" புதினத்தில் பெண்களின் வாழ்வியல், சுரண்டல் மற்றும் சமூக ஒடுக்கு முறைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**உறவு முறைகள் மற்றும் குடும்ப அமைப்பு**

குடும்ப அமைப்பு, உறவு முறைகள், திருமண முறைகள் ஆகியவை முக்கியமாக விவரிக்கப்படுகின்றன.

**இடம்பெயர்வு மற்றும் பண்பாட்டு நினைவியல்**

அவருடைய படைப்புகளில் முக்கிய நோக்கத்தில் ஒன்றாக இடம்பெயர்வு உள்ளது. இடம் பெயர்ந்து போன மனிதர்கள் தங்கள் சொந்த பண்பாட்டை எவ்வாறு தாங்கிச் செல்கின்றனர்? புதிய இடங்களில் அவர்கள் பண்பாட்டை எப்படி நிலைநாட்ட முயல்கிறார்கள்? எத்தகைய பண்பாட்டு மோதல்களை எதிர்கொள்கிறார்கள்? இவற்றை எழுத்தாளர் மானுடவியல் பார்வையுடன் ஆராய்கிறார். இதன் மூலம் "இடம்" என்பது வெறும் நிலப்பரப்பு அல்ல, அது நினைவுகள், காயங்கள், மொழி, அடையாளம் என அனைத்தையும் தாங்கும் உயிர் மிக்க பண்பாட்டு வடிவமாக உள்ளது என்பதை மிகத் தெளிவாகவும் அழகாகவும் வெளிப்படுத்தி உள்ளார்.

**மொழி**

பண்பாட்டின் நினைவு மற்றும் எதிர்ப்பினைக் காட்டும் மொழி ஒரு அடையாளப் போராட்டம் போன்றது. மொழியின் பயன்பாடு, உச்சரிப்பு, சொற்களின் தேர்வு, பழக்க வழக்கங்கள் ஆகியவை குறிப்பிட்ட சமூக வர்க்கத்தையும் அடக்கு முறையையும் ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்பையும் பிரதிபலிக்கின்றன. 'மொழி' என்பது பண்பாட்டின் நினைவு என்பதை அவர் வலியுறுத்துகிறார். அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்திலும் மொழி முக்கிய கருவியாகிறது.

**கிராமப்புற பண்பாட்டு வாழ்க்கையின் மானுடவியல்**

விவசாயம், திருவிழாக்கள், சடங்கு முறைகள், ஊர்ப்புற நம்பிக்கைகள், உறவு செயல்பாடுகள் ஆகியவை உயிரோட்டமாக சித்தரிக்கப்படுகின்றன. இதனால் கிராம வாழ்வியல் முறைகளே ஒரு பண்பாட்டு உயிரினம் போல உருவெடுக்கிறது. கிராமத்தின் ஒவ்வொரு செயல்பாடும் சமூக ஒத்துழைப்பு, அதிகார இயக்கம் மற்றும் பண்பாட்டு அடையாளம் ஆகியவற்றின் இணைப்பைப் பதிவுச் செய்கின்றன.

**பொருளாதார அமைப்பு**

இவரது புதினங்களில் கதைக்கான பின்புலங்களாக தென்னார்க்காடு மாவட்டத்தின் நெல் வயல்களும், முந்திரி அடர்ந்த செம்மண் பூமியும், விவசாயம், தொழில், வர்த்தகம், நிலக்கரி சுரங்கம் போன்ற பொருளாதார அமைப்புகள் விவரிக்கப்படுகின்றன. 'வந்தாரங்குடி' என்னும்